வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 07.08.2024 புதன்கிழமை இதழ் : 220 பக்கங்கள் : 12


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# காங்கேசன் துறைமுக அபிவிருத்தி; இந்தியா 6.2 கோடி டொலர் மானியம்

கொழும்பு, ஓகஸ்ட் 07

**காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்திக்காக 6.2 கோடி அமெரிக்க டொலர்களை (நம் நாட்டு மதிப்பில் சுமார் 1873 கோடி ரூபாய்) மானியமாக வழங்க இந்தியா முன்வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் குறித்த துறைமுகத்தை 30 வருடங்களுக்கு செயல்படுத்த இந்தியா முயற்சிக்கிறது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில், காங்கேசன்துறை துறைமுக திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்திய அரசாங்கம் கடன் வழங்க திட்டமிட்டது. எனினும், தற்போதைய பொருளாதார நிலையால் இலங்கையில் திட்டங்களை முன்னெடுப்பதில் இந்தியா தனது கவனத்தை மாற்றியுள்ளது.

எவ்வாறாயினும், இந்தியாவின் மானிய உதவியின் கீழ் குறித்த துறைமுக அபிவிருத்திக்கான முன்மொழிவுக்கு இலங்கை

11

## இலங்கை - இந்திய பிரதிநிதிகள் மூலம் மீனவர்கள் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு!

### இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்

புதுடில்லி, ஓக. 07

இலங்கை, இந்திய பிரதிநிதிகள் சந்திப்பை ஏற்படுத்தி மீனவர் பிரச்னைக்குத் நிரந்தர தீர்வு காணப்படும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் கே.அண்ணாமலை மற்றும் தமிழக மீனவர் சங்கத்தினர், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

11

## சஜித்துக்கே எமது ஆதரவு!

### தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 07

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணி நேற்று அறிவித்துள்ளது.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கொழும்பில் நேற்றுக் காலை செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

இதில் உரையாற்றிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்,

11



## அநுரவும் கட்டுப்பணம்!

கொழும்பு, ஓக. 07

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக போட்டியிடும் அனுரகுமார திஸாநாயக்க கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார்.

அதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், ஹரிணி அமரசூரிய, சட்டத்தரணி சுனில் வதகல உள்ளிட்ட குழுவினர் தேர்தல்கள்

11

## மொட்டுவின் வேட்பாளர் இன்று காலை அறிவிப்பு!

### கட்சி தலைமையகத்தில் நிகழ்வு

கொழும்பு, ஓக. 07

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பை தாமரை தடாகத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் முறையான அனுமதி கிடைக்காமையால் நெலும் மாவத்தையில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் நிகழ்வில் அறிவிக்கவுள்ளதாக பொதுஜன பெரமுனவின் மிலிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேர்தல் விதிமுறைகளை மதித்து நடக்க வேண்டும் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது

11

## ஓக. 30 போராட்டத்துக்கு ஒத்துழைப்புத் தாருங்கள்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 06

"சர்வதேச சமூகத்தின் தலையீட்டை வலியுறுத்தி எதிர்வரும் 30ஆம் திகதி மாபெரும் போராட்டத்தை நடத்தவுள்ளோம். எமது போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும்", என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் ஊடக மையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை

11

## பதவி விலகினார் நாமல்!

கொழும்பு, ஓக. 07

சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பதவியில் இருந்து பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விலகியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றில் அறிவித்தார்.

11

## தேர்தலில் எங்களுக்கு எவரும் சவால் அல்லர்!

### நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதித் தேர்தலில் எமக்கு எவரும் சவால் அல்லர் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பாக பொது ஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தலைமையில்

11

## நிலையான அபிவிருத்திக்கான இலக்கை 2040இல் எட்டுவோம்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஓக. 07

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல்களை பயன்படுத்துதல், விவசாயத்தை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்ப்பற்றாக்குறைக்கு தீர்வு வழங்குதல் போன்ற துரிதமுறைகள் மூலம் 2040ஆம் ஆண்டளவில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் நிகர பூச்சிய கார்பன் உமிழ்வை அடைவதற்கும் இலங்கை செயல்பட்டு வருகிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

11

## லண்டனில் ஈழத் தமிழர்கள் வாழும் ஹரோவில் வன்முறைக்கு திட்டம்?

### சமூகவலைதளங்களில் பரவும் தகவல்

லண்டன், ஓக. 07

லண்டனில் ஈழத்தமிழர்கள் அதிகமாக வாழும் இடங்களில் ஒன்றான ஹரோவில் இன்றிரவு வன்முறை தாக்குதலில் ஈடுபட அதிதீவிர வலதுசாரி குண்டர்கள் திட்டமிட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகின என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

பிரிட்டனில் குடியேறிகள், இஸ்லாமியர்களை இலக்கு வைத்து கடந்தவாரம் வன்முறை வெடித்தது. இந்த

11



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பற்றி பலரும் பல்வேறு கோணங்களில் விமர்சிப்பதுண்டு. அவரை ஒரு தடவை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், "நரியன்" என்று விளித்து லண்டனில் உரையாற்றியமை பிரசித்தமானது.

அவர், பெரியதந்தையார் ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டவர். அவரால் அரசியலில் வளர்க்கப்பட்டதாலோ என்னவோ இவரையும் ஜே. ஆருடன் பலரும் பொருத்திப் பேசுவதுண்டு.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அவரின் ஐக்கிய தேசியக் கட்சி துடைத்து எறியப்பட்டபோது அந்தக் கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்குள் வந்து, தனது வழக்கமான அரசியல் காய்நகர்த்தல்களில் இன்று ஜனாதிபதி கதிரையில் இருப்பவர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எப்படியும் வெற்றிபெற்று மீண்டும் ஓர் ஐந்து ஆண்டுகளுக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக பதவியில் இருக்கவேண்டும் என்பது அவரின் இன்றைய குறி.

அதற்காகவே அவர் தனக்குத் தெரிந்த அத்தனை வழிகளிலும் முயன்று கொண்டிருக்கிறார்.

இந்தத் தேர்தலில் கடுமையான மும்முனை போட்டி நிலவுவதால், யாருமே முதல்கட்ட வாக்கு எண்ணிக்கையில் ஐம்பது வீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெறமாட்டார்கள் என்றும் இரண்டாம் கட்ட வாக்கு எண்ணிக்கையே யார் ஜனாதிபதி என்பதைத் தீர்மானிக்கும் எனவும் நம்பப்படும் நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் முடிவைத் தீர்மானிக்கும் வாக்குகளாக இருக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

அதனால்தான் பிரதான மூன்று வேட்பாளர்களும் வடக்கு - கிழக்குக்கு அடிக்கடி பயணம்செய்து களநிலைமைகளை அவதானிப்பதுடன் தமிழ் மக்களின் வாக்குகளை கவர்வதற்கான முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில், வடக்கு - கிழக்கை குறிவைப்பவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிக கவனத்தை செலுத்தி வருவதையும் கவனிக்க முடிகின்றது.

ஆனால், அவரின் கடைசி பயணத்தின்போது அவர் நடத்திய சந்திப்புகள், அவரது அரசியல் அறிவையும், அவர்பற்றிய தமிழ் மக்களின் பார்வையையும் கேள்விக்கு உட்படுத்தியிருக்கின்றது.

தமிழ் மக்களின் அரசியலில் இதுவரை இலங்கை தமிழ் அரசு கட்சியே முக்கிய கட்சியாக இருந்துவந்தது. அதற்குக் காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து செயல்பட்டபோதிலும் தமிழ் அரசு கட்சியின் வீட்டு சின்னத்திலேயே போட்டியிட்டனர் என்பதும் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று அழைக்கப்பட்டாலும் பாராளுமன்றத்தில் அவர்கள் தமிழ் அரசுக் கட்சியின் எம். பிக்களே. அந்தக் கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்றதால், அவ்வாறு அவர்கள் தமிழ் அரசுக் கட்சியின் எம். பிக்களாகவே இன்றும் இருந்துவருகின்றனர். அதனால்தானோ என்னவோ இன்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றதும் தெற்கில் உள்ளவர்களுக்கு தமிழ் அரசு கட்சியே நினைவுக்கு வருகின்றது.

எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு தமிழ் அரசு கட்சியை தமக்கு ஆதரவானதாக மாற்றிவிட்டால் போதும் என்றே தெற்கு அரசியல்வாதிகள் இப்போதும் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், தமிழ் அரசுக் கட்சியே இன்று இரண்டுபட்டு நிற்கின்றது. அதில் ஓர் அணி யாராவது வேட்பாளர் ஒருவருடன் "டீல்" போடுவதற்காக ஓடித் திரிந்துகொண்டு, அதற்கு இடையூறாக இருக்கின்றது என்பதற்காகவே தமிழ் பொதுவேட்பாளரை கண்மூடித்தனமாக எதிர்த்துக் கொண்டிருக்கின்றது. இன்னுமோர் அணியோ, தெற்கு வேட்பாளரை ஆதரிப்பது எனில், அவர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கு தீர்வாக சமஷ்டியை தருவோம் என்று சொன்னால் மாத்திரமே அதனை ஏற்றுக் கொள்ளமுடியும் என்றும் இல்லையேல் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பது எனவும் கூறிக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலையிலேயே எதிர்வரும் பதினொராம் திகதி, தமிழ் அரசின் மத்திய செயல்குழு கூடி முடிவெடுக்க விருப்பதாகக் கூறியிருக்கின்றது. அந்த ஒரு கூட்டத்தோடு முடிவெடுக்கப் போவதில்லை என்பதும் நமக்கு தெரியாததல்ல. இந்த இலட்சணத்தில் அவர்கள் இனி முடிவெடுத்து யாரையாவது ஒரு வேட்பாளரை (தெற்கின்) ஆதரிக்கச் சொன்னால்கூட அவர்களின் கதையைக் கேட்டு தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா என்பது இன்று மில்லியன் டொலர் கேள்வியாக இருக்கின்றது.

இந்நிலையில் தமிழ் அரசின் தலைவர் மாவையையும் சுமந்திரனையும் சந்தித்துவிட்டால், அவர்கள் சொன்னால் தமிழ் மக்கள் தனக்குத்தான் வாக்களிப்பார்கள் என்று ரணில் விக்கிரமசிங்க நம்புகின்றார் என்பது அவரின் அரசியல் ஞானத்தின்மீதே கேள்வியை எழுப்பியிருக்கின்றது.

கூடவே, யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு சென்ற ரணில் விக்கிரமசிங்க திருகோணமலையிலும் தமிழ் அரசின் குழு ஒன்றைச் சந்தித்து "சுயதிருப்தி"யுடன் கொழும்பு திரும்பியிருக்கிறார்.

சம்பந்தன் இயற்கை எய்தியதால் சில மாதங்கள் பாராளுமன்ற உறுப்பினராக பதவிவகிக்கும் அதிர்ஷ்டத்தைப் பெற்ற ஒருவர் தனக்கு விசுவாசமான சிலரை அழைத்து ரணிலுடன் சந்தித்து அவரை திருப்திப்படுத்தியிருக்கிறார்.

திருகோணமலையில் நடந்த அந்தச் சந்திப்பில், மாகாண சபைகளிலிருந்து மத்திய அரசாங்கம் எடுத்த அதிகாரங்களை மாகாணத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இது தொடர்பாக மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோருடன் உடன்பட்டுள்ளார் என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். தமிழர் தரப்பில் யாருடன் உடன்பாடு செய்துகொள்ளவேண்டும் என்பதையே தெரிந்துகொள்ள முடியாத நிலையில் அவர் இருக்கிறாரா? அல்லது அவர்களுடன்தான் உடன்பாடு எட்டலாம் என்ற நம்பிக்கை அவருக்கு எற்கனவே இருப்பதால்தான் அவர்களுடன் மட்டும் உடன்பாட்டுக்கு போனாரா என்பது தெரியவில்லை. ஏற்கனவே இவர்களுடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்து, இடைக்கால தீர்வாக வெளியிட்ட "எக்க ராஜ்ய" உடன்பாட்டுக்கு என்ன ஆனது என்பதையும் அல்லவா சொல்லியிருக்கவேண்டும்.!

- ஊர்க்குருவி

## பொருளாதாரப் பிரச்னைக்கு ரணிலும் முக்கிய பங்குதாரர்

### சரித்த ஹேரத் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொருளாதாரப் பிரச்னையின் பங்குதாரர் தான் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் குறிப பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை ஜனாதிபதி தேர்தல் ஏனைய ஜனாதிபதி தேர்தல்களை விட மிக முக்கியமானதாகும்.

நாட்டைக் காப்பாற்றினேன் என்று பொய்களை சமூகமயப்படுத்தும் போக்கை ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வருகிறார்.

பொருளாதார மீட்சி தொடர்பான பொய்யான விடயங்களை சமூகத்துக்கு காண்பிக்கிறார். அவர் மீட்சியாளர் அல்லர். அவரும் இந்த பொருளாதார பிரச்னையின் பங்குதாரர் தான்.

வேறுயாரும் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. அதனால் நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டேன் என கூறுவது முற்றிலும் பிழையான கருத்தாகும். நிபந்தனைகளுடன் சஜித் கடிதம் அனுப்பினார். அதை பொருட்படுத்தவில்லை. சரத் பொன்சேகா தனது விருப்பத்தைத் தெரிவித்தார்.

அதற்கும் கடந்த அரசாங்கம் செவி சாய்க்கவில்லை. அவர்களாக கொடுத்த பதவியை தானாக ஏற்றுக்கொண்டார். ரணில் விக்ரமசிங்கவிடம் எந்த தீர்வும் இல்லை. தீர்வுகளுக்கு அவர் பதிலாக அமையவில்லை.

பிரச்சினையின் பங்குதாரர் தான் ரணிலும். பொருளாதார மீட்சி தொடர்பாக அவர் பொய்யான தோற்றப்பாடுகளை சமூகத்தில் ஏற்படுத்துகிறார். பொருளாதார வளர்ச்சி என்பது வெறுமனே இலக்கங்களை கொண்ட ஒன்றல்ல.

அது மக்கள் சார்ந்ததுமாகும். பொருளாதார வளர்ச்சி காணப்படுமாக இருந்தால் அது மக்களிலும் பிரதிபலிக்கும். ஒட்டுமொத்த மக்களையும் இலக்காக கொண்ட பொருளாதார வளர்ச்சியையே சஜித் பிரேமதாஸ தலைமையிலான கூட்டணி முன்னெடுத்துள்ளது- என்றார். (அ)

## வீடொன்றின் மீது விழுந்தது பலா மரம் குழந்தை உட்பட நால்வர் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஓக. 07

மழையுடன் கூடிய பலத்த காற்று காரணமாக பாதுக்க, பொரேகெதர பிரதேசத்தில் வீடொன்றின் மீது பாரிய பலா மரமொன்று வீழ்ந்ததில் ஒரு குழந்தை உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நேற்று முன்தினம் மாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பாதுக்க பொலிஸார் தெரிவித்தனர்.

மரம் முறிந்து வீழ்ந்ததில் குறித்த வீடு முற்றாக இடிந்துள்ளதுடன், வீட்டினருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றும் பலத்த சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அனர்த்தத்தில் காயமடைந்த 10 வயது பிள்ளை, கணவன், மனைவி மற்றும் பெண் ஒருவர் பாதுக்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

## தயாசிறி, விஜயதாஸவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

### எச்சரிக்கிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, ஓக. 07

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெயரையும் பதவியையும் பயன் படுத்தி ஒரு சிலர் கட்சி உறுப்பினர்களை ஏமாற்றி வருவதாகவும், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அகுனுகொலபலஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற பிரதேசத்தில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முழு சட்ட அதிகாரமும் எமது குழுவிற்கு உண்டு. ஆனால் கட்சியின் சட்ட உரிமையற்ற தயாசிறி ஜயசேகர மற்றும் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் இக்கட்சியின் பொதுச் செயலாளராகவும் தலைவராகவும் காட்டிக்கொண்டு எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக பிரசாரம் செய்கின்றனர்.

அவர்கள் இருவரும் கட்சி விவகாரங்களில் இடையூறு செய்யவோ, தலையிடவோ கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இருந்த போதிலும், பதவிகளையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெயரையும் இவ்வாறு பயன்படுத்தி எமது உறுப்பினர்களை தவறாக வழிநடத்துவதற்கு அவர்களுக்கு சட்டரீதியான உரிமை கிடையாது.

எனவே இது தொடர்பாக அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

## 22 இந்திய மீனவர்கள் புத்தளத்தில் கைது!

கொழும்பு, ஓக. 07

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்கள் புத்தளம் - கற்பிட்டி வடக்கு கடற்பகுதியில் நேற்று முன் தினம் இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் - தூத்துக்குடியில் இருந்து வந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இரண்டு படகுகளில் வருகை தந்த குறித்த இந்திய மீனவர்கள், கற்பிட்டியில் வடக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மேலும் குறித்த இந்திய மீனவர்கள் பயணித்த இரண்டு விசைப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் கூறினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 07.08.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆடி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புலம்பெயர் சமூகம் அணிதிரளுமா?

அநுர குமார திஸநாயக்கா புலம்பெயர்ந்த சிங்கள மக்களை தொடர்ந்தும் சந்தித்து வருகின்றார். இவ்வாறு சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாங்கள்தான் உங்களுக்கான ஒரேயொரு தெரிவு என்கின்றார் - அந்த அடிப்படையில் உங்களின் ஆதரவை எங்களுக்கு தர வேண்டும் - எங்களின் வெற்றிக்காக நீங்கள் ஒன்றுதிரள வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றார். இந்தப் பின்புலத்தில் தமிழ் புலம்பெயர் சமூகம் என்ன செய்யப் போகின்றது என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி அணிதிரளப் போகின்றதா அல்லது தமிழ்ப் பொது வேட்பாளரை தோல்வியுறச் செய்யப் போகின்றதா?

2009இற்கு பின்னரான, கடந்த பதினைந்து வருடங்களில் தமிழ் மக்கள் மத்தியில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய அரசியல் செயல்பாடுகள் எதனையும் களத்திலும் புலத்திலும் மேற்கொள்ள முடியவில்லை. அவ்வாறான முயற்சிகள் தொடர்பில் சிலர் பேசியபோதிலும்கூட, அதனை அடுத்த கட்டத்துக்கு அவர்களால் கொண்டு செல்ல முடியவில்லை. ஆனால், முதன்முறையாக தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் நிலைப்பாடு கணிசமான தூரம் வரையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த காலத்தில் ஒரு தனிநபராக தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டியிட்டமை தமிழ் அரசியல் சூழலில் பலவீனமாகவே நோக்கப்பட்டது - மக்களும் ஆதரிக்கவில்லை. மக்கள் அவ்வாறான ஒருவரை ஆதரிக்காத போது அவர் முன்வைத்த கோரிக்கைகளின் பெறுமதி என்ன? இது தொடர்பில் புலம்பெயர் அமைப்புகள், அரசியல் செயல்பாட்டாளர்கள் தெளிவாக சிந்திக்க வேண்டும். புலம்பெயர் சூழலில் நினைப்பதை தாயகத்திலுள்ளவர்கள் கூறவேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாது.

தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஒரு வெற்றிகரமான நிலைப்பாடாக முன்னெடுப்பதைத் தங்களின் கடமையாக புலம்பெயர் சமூகம் கருத வேண்டும். இரண்டு வழிகளில் புலம்பெயர் சமூகம் இதனை பலப்படுத்த முடியும் - ஒன்று. பலமான நிதி ஆதரவு இரண்டாவது. தங்களின் உறவினர்கள் வழியாக களத்தில் பிரசாரத்தை தீவிரப்படுத்துதல். புலம்பெயர்ந்து வாழும் சிங்கள மக்களால் அநுர குமார திஸநாயக்கவின் வெற்றிக்காக ஒன்றுபட முடியும் - உழைக்க முடியும் என்றால் ஏன் தமிழ் புலம்பெயர் சமூகத்தால் முடியாது? யூத "டயஸ்போறா"வுக்கு பின்னர், ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ் டயஸ்போறாவுக்கு ஒரு சர்வதேச முகமுண்டு. தற்போது அவ்வாறானதொரு முகம் எங்களுக்கு இருக்கின்றது என்பதை நிரூபிப்பதற்கான சூழல் உருவாகியிருக்கின்றது. இதனை புலம்பெயர் சமூகம் ஒரு சமூகமாக நிரூபிக்கத் தவறினால் புலம்பெயர் சூழலிலிருந்து இதுவரையில் கூறிவந்த விடயங்கள் அனைத்தும் அர்த்தமற்றதாகிவிடலாம்.

தமிழ் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் வாக்குகளை குவிப்பதில் புலம்பெயர் சமூகத்துக்கு பெரியளவிலான பங்கு உண்டு. இதனை செய்யத் தவறினால் புலம்பெயர் சமூகம் வலுவற்றதாக இருப்பதான தோற்றமே மிஞ்சும். புலம்பெயர் அமைப்புகள் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். செயல்பட வேண்டும். இது தமிழ்த் தேசியத்தின் பெயரால் தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி அணிதிரள வேண்டிய காலம். இந்த விடயத்தில் களமும் புலமும் ஒன்றுதிரள வேண்டும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் யார் - அவரின் தகுதிகள் என்ன என்பதற்கு அப்பால் அவர் தமிழ்த் தேசிய இனத்தின் குறியீடாக இருக்கின்றார் என்பதைப் பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டும். இனத்தின் குறியீட்டை நோக்கி, எவ்வாறு மக்களை அணிதிரட்டுவது - அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் - இந்தக் கேள்விகள் மட்டுமே புலத்தில் இருக்க வேண்டும்.

# செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சைக்கிள் பவனி




யாழ்ப்பாணம், ஓக. 07

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சைக்கிள் பேரணி ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் சு. கணேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் வடக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், கூட்டுறவு ஆணையாளருமாகிய ந.திருலிங்கநாதன் கலந்து கொண்டிருந்ததுடன் சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் பாடசாலை பரிசளிப்பு விழாவின் அனுசரணையாளருமான க.இராஜரட்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

காலை 8 மணியளவில் மாணவர்களின் நடை பவனியும் அதனை தொடர்ந்து சைக்கிள் பவனியும், பழைய மாணவர்களின் வாகன பேரணிகளும் இடம் பெற்றன. பாடசாலை முன்றலிலிருந்து ஆரம்பமான குறித்த பவனி மாமுனைச் சந்தியை அடைந்து அங்கிருந்து மாமுனை கடற்கரைக்கு சென்று. கடற்கரையிலிருந்து தாளையடி கடற்கரை சென்று அங்கிருந்து மருதங்கேணி சந்திக்கு சென்று அங்கிருந்து மீண்டும் பாடசாலையை சென்றடைந்தது.

குறித்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அயல் பாடசாலை அதிபர்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளர், உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(அ-2)

# கனடாவில் காணாமல்போன தமிழரை தேடும் பணி தீவிரம்

கொழும்பு, ஓக. 07

கனடாவில் காணாமல் போயுள்ள தமிழரை கண்டு பிடிக்க பீல் பிராந்திய பொலிஸார் பொது மக்கள் உதவியை நாடியுள்ளனர்.

**64** வயதான யோகராஜா என்பவர் கடந்த **31**ஆம் திகதி புதன்கிழமை முதல் பிரம்டன் நகரில் வைத்து காணாமல் போயுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஒன்றாரியோ மாகாண உரிமத் தகடு கொண்ட வாகனத்தில் இவர் கடைசியாக பயணித்தாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில், குறித்த நபரை அல்லது குறிப்பிட்ட வாகனத்தை கண்டவர்கள் தம்மை தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொது மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், குறித்த நபர் திட்டமிடப்பட்டு கடத்தப்பட்டிருக்கலாம் என குடும்பத்தினர் சந்தேகம் தெரிவித்துள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இவரது தொலைபேசி கடந்த **31**ஆம் திகதி மதியம் **12.31** முதல் செயலிழந்து உள்ளதாகவும் குடும்பத்தினர் கூறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை!

முல்லைத்தீவு, ஓக. 07


ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னாகண்டல் பகுதியில் சட்ட விரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்ட ஒட்டுசுட்டான் பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரையும் கசிப்பு உற்பத்தி செய்யும் கோடாவுடன் மூன்று பரல்களையும் மீட்டுள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னாகண்டல் அறுமனாறு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக ஒட்டுசுட்டான் சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ரி.சுபேசன் தலைமையில் பொலிஸ் குழுவினர் சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

இதன்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 475 லீற்றர் கோடாவுடன் மூன்று பரல்கள் கோடாவினையும் கைப்பற்றினர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒகஸ்ட் - 07 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆடி 22
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திருதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**இடபம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**மிதுனம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உருவாகும். மறைமுக நெருக் கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**கன்னி**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். எச்சரிக்கை தேவைப்படும் நாள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி வாழ்வில் உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர், நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மதிப்புக்கூடும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் நல்ல முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் முக்கிய வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். வியாபாரத்தில் சரக்குகள் விற்கும். திடீர் யோகம் கிட்டும்.

# தமிழ்நாட்டை மூன்றாக பிரித்தால் ரூ. 45 கோடி நிதி பெற்று தருவோம்!

## பாரதிய ஜனதா கட்சி சொல்கிறது

நாமக்கல், ஒக. 07

தமிழ்நாட்டை 3 மாநிலங்களாக பிரித்தால் ரூ. 45 ஆயிரம் கோடி நிதி பெற்றுத் தருவோம் என்று பா. ஜ. கவின் தமிழ்நாடு துணைத் தலைவர் கே. பி. ராமலிங்கம் கூறியுள்ளார்.

நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவை வருமாறு,

பா. ஜ. கவுக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என்ற பாரபட்சம் பார்க்காமல், அனைத்து மாநிலங்களுக்கும் தேவையான நிதியை மத்திய அரசு பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆனால், மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை என்று தமிழக அரசு பொய் பிரசாரம் செய்து வருகிறது.

நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் ஒருமுறை கூட கலந்துகொள்ளவில்லை. அதில் பங்கேற்று, தமிழகத்துக்கு தேவையான திட்டங்களை விளக்கி, நிதி ஒதுக்கீடு கேட்டால்தானே, தமிழகம் பயன் பெற முடியும் - என்றார். (ஐ)

# மீனவர் காணாமல் போனால் 3 மாதங்களில் மரண சான்றிதழ்!

## விஜய் வசந்த் எம். பி.

புதுடில்லி, ஒக. 07

மீன் பிடிக்க செல்லும்போது கடலில் மீனவர்கள் காணாமல் போனால் 3 மாதங்களில் இறப்பு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் விஜய் வசந்த் எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் பேசிய அவர்,

மீன்பிடிக்க சென்று கடலில் காணாமல் போகும் மீனவர்களுக்கான இறப்பு சான்றிதழ் 7 ஆண்டுகளுக்கு பிறகு தான் வழங்கப்படுகிறது. இந்த கால கட்டத்தில் அந்த குடும்பம் பல இன்னல்களை சந்திக்கிறது. எனவே, இதுபோன்ற சூழலில் உயர்மட்ட குழு அமைத்து 3 மாதத்துக்குள் இறப்பு சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மீனவர் கடலில் இறந்தால் அவர்களது குடும்பத்துக்கு நஷ்ட ஈடாக ரூ.10 இலட்சம் வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# தமிழ்நாட்டின் தொழில் துறையை பாதாளத்தில் தள்ளியுள்ளது தி.மு.க.!

## எடப்பாடி பழனிசாமி சாடல்

சென்னை, ஒக. 07

தமிழக ஆடை நிறுவனங்கள் தங்களின் முதலீடுகளை அயல் மாநிலங்களுக்கு மடைமாற்றும் அளவுக்கு தமிழக தொழில் துறையை படுபாதாளத்துக்கு தி. மு. க. அரசு தள்ளியுள்ளது என்று எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆட்சிக்கு வந்து 38 மாதங்களில் குடும்பத்துடன் ஐக்கிய அரேபிய நாடுகள் பயணம், பிறகு சிங்கப்பூர் சுற்றுப் பயணம் 2024ஆம் ஆண்டு ஜனவரி 7, 8 ஆகிய நாள்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு பிறகு ஜனவரி 27-ல் ஸ்பெயினுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு அந்நிய முதலீடுகள் ஈர்ப்பில் தமிழகத்தை பின்னுக்கு தள்ளியதில்தான் இந்த தி. மு. க. அரசு சாதனை புரிந்துள்ளது.

அம்மாவின் ஆட்சியில் 2020-2021இல் அன்னிய நேரடி முதலீடுகளை ஈர்த்தலில் 3ஆவது இடத்தில் இருந்த தமிழகத்தை, 2022-23இல் 27.70 சதவீதம் குறைவாக அந்நிய முதலீட்டை ஈர்த்து, 8ஆவது இடத்துக்குப் பின்னுக்குத் தள்ளியதுதான் நிர்வாகத் திறனற்ற முதலமைச்சரின் சாதனை' என்று சரியாக ஒராண்டிற்கு முன், அதாவது ஆகஸ்ட் 2023 அன்று நான் அறிக்கை மற்றும் பேட்டிகள் வாயிலாக தெரிவித்திருந்தேன். இதுகுறித்து வெள்ளை அறிக்கையும் வெளியிட வேண்டும் என்று முதலமைச்சர் ஸ்டாலினை வலியுறுத்தி இருந்தேன். ஆனால், இதுவரை தி. மு. க. அரசு வெள்ளை அறிக்கை எதையும் வெளியிடவில்லை. (ஐ)

# உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி; கோரிக்கை வலுப்பு - பழுக்கவில்லை!

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, ஒக. 07

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு துணை முதல்வர் பதவி அளிக்கப்படுமா என்ற கேள்விக்கு, கோரிக்கை வலுத்திருக்கிறது - பழுக்கவில்லை என முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலளித்தார்.

சென்னை கொளத்தூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை பல்வேறு திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்ததுடன், சில பணிகளை ஆய்வு செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

சென்னையில் தண்ணீர் எங்கும் தேங்கவில்லை. தண்ணீர் தேங்கி நிற்பதாக எதிர்க்கட்சிகள் கூறியதாகச் சொல்கிறீர்கள். எங்கே தேங்கி நிற்கிறது என எதிர்க்கட்சிகளைக் காட்டச் சொல்லுங்கள்.

பருவமழையை எதிர்கொள்ள அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. எப்படிப்பட்ட மழை வந்தாலும் சந்திப்பதற்கு அரசு தயாராக உள்ளது என்றார். (ஐ)

# கூலிப்படை கலாசாரத்தை தமிழ்நாட்டில் ஒழியுங்கள்!

## திருமாவளவன் கோரிக்கை

சென்னை, ஒக. 07

தமிழகத்தில் கூலிப் படை கலாசாரத்தை கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவரும் எம். பியுமான தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

ஆம்ஸ்ட்ராங் குடும்பத்துக்கு கொலை மிரட்டல் வந்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. உடனடியாக தமிழக அரசு அவர்களுக்கு பாதுகாப்பு அளித்திருப்பதை வரவேற்கிறோம்.

தமிழ்நாடு அரசு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமல் கர்நாடகம் மேகதாது அணையை கட்ட வாய்ப்பில்லை. உதயநிதி துணை முதல்வராக வேண்டும் என்பது உட்கட்சி விவகாரம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவைப் பிளவுபடுத்த ரணில் முயற்சிக்கவேயில்லை!

## அடித்துச் சொல்கிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஓக. 07

**பொதுஜன பெரமுனவை இரண்டாக பிளவுபடுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் முயற்சிக்கவில்லை என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் விசேட கலந்துரையாடல் நேற்று முன் தினம் இரவு பத்தரமுல்லையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர, ரமேஷ் பத்திரன, அலி சப்ரி மற்றும் அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக மாவட்ட மட்டத்தில் மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறியதாவது:-

**கேள்வி** - பொதுஜன பெரமுனவை ஜனாதிபதி பிளவுபடுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்** - ஜனாதிபதி எம்மை ஒதுக்கவோ அல்லது பிரிக்கவோ ஒருபோதும் முயற்சிக்கவில்லை என்பதை நான் மிகுந்த பொறுப்புடன் கூறுகின்றேன். நாட்டு மக்களின் அபிப்பிராயத்தின்படி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குமாறு அவர்கள் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுத்தார்கள். கட்சியாக இணைந்து பணியாற்றுமாறு அவர் எப்போதும் கூறுவார். நடனம் ஆட முடியாதவர்களை பூமி இழுக்கும் என்பது போல் சாக்குப்போக்கு சொல்பவர்களின் கருத்தே ஒழிய இது எங்களின் கருத்து அல்ல.

**கேள்வி** - கட்சிக்கு ஏன் ஒரே கருத்துக்கு வர முடியவில்லை?

**பதில்** - இந்த மொட்டு கட்சி மக்களின் வியர்வையால் கட்டியெழுப்பப்பட்ட கட்சி. இது பணக்காரர்களுக்கு வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது விற்பதற்கு ஏற்ற கட்சி அல்ல. 2022 இல் ஜனாதிபதி நல்லவராக இருந்தால், அவர் தனது பொறுப்பை நிறைவேற்றியிருந்தால், அவர் ஏன் இன்று மோசமாக இருக்கிறார்?

**கேள்வி**- இந்த கலந்துரையாடலில் என்ன பேசப்பட்டது?

**பதில்** - ஜனாதிபதியின் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடினோம். மேலும், இதுவரை முடிவெடுக்காதவர்கள் இன்று எம்முடன் பேசினர். (அ)

# தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கை எதிர்வரும் 09 ஆம்திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் கையளிக்க முடியும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் காலம் நேற்று முன் தினம் நள்ளிரவுடன் நிறைவடைவிருந்தபோதிலும் அந்த காலஎல்லை தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடமைகளுக்கு அவசியமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்து மதிப்பிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

(அ)

# வவுனியாவில் ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்பு!

வவுனியா, ஓக. 07

வவுனியா - நெளுக்குளம் பாலாமைக்கல் பகுதியில் ஆசிரியர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த வீதியூடாகப் பயணித்த பிரதேசவாசிகள் சிலர் நெளுக்குளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய நேற்று காலை இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சடலம் மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் குறித்த ஆசிரியரின் துவிச்சக்கர வண்டி, பாதணிகள் மற்றும் குடை என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நியமனம் சிக்கலில்

கொழும்பு, ஓக. 07

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நியமனம் தொடர்பாக காணப்படும் சட்ட நிலைமை குறித்து சட்டமாஅதிபரிடம் ஆலோசனை கோரியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தப் பதவிக்கு சுதந்திரக் கட்சியின் 03 தரப்புகளிலிருந்தும் செயலாளர்கள் முன்வந்துள்ளதாக ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதனைத் தவிர கட்சியின் பதவி தொடர்பில் நீதிமன்றத்தில் சில வழக்குகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த சூழலில் கட்சியின் செயலாளரை நியமிப்பது தமது ஆணைக்குழுவுக்கு சிக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளதென தவிசாளர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# இஸ்ரேலில் பணி புரிந்துவரும் இலங்கையருக்கு விசேட அறிவிப்பு

கொழும்பு, ஓக. 07

இஸ்ரேலில் நிலவும் மோதல் சூழ்நிலையில், நாட்டில் உள்ள அனைத்து இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டு பணியாளர்களுக்கு அவசரநிலையில் செயல்பட பல தொலைபேசி இலக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில், இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டாரவிடம் வினவிய போது, தற்போது சுமார் 11,000 இலங்கையர்கள் இஸ்ரேலில் பணி புரிவதாகவும் அவர்களில் 70 வீதமானவர்கள் தாதியர்களாக கடமையாற்றுவதாகவும் தெரிவித்தார்.

எஞ்சிய 30 வீதமானோர் விவசாயம் மற்றும் நிர்மாணத் துறையில் பணிபுரிவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் என இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

(அ)

# யார் வேண்டுமானாலும் ரணிலுடன் இணையலாம்

## ஆசு மாரசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஓக. 07

எந்தவொரு நபரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காக உழைக்க முடியும் என ஜனாதிபதியின் ஆலோசகர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற போது, அவர் முழு தாய்நாட்டையும் பாதுகாத்தாரே ஒழிய அரசியல் அல்லது தனிப்பட்ட குழுக்களை அல்ல என்று அவர் வலியுறுத்தினார்.

அப்போது ஜனாதிபதி பதவியை ஏற்கும் பொறுப்பை புறக்கணித்துவிட்டு, ஜனாதிபதி வேட்பாளர்கள் வாக்காளர்கள் முன்னிலையில் தங்கள் நேர்மையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை தலைவராக போட்டியிடுகிறார். அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்புவோம் என்பதே பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய ஒவ்வொரு உரையின் சுருக்கமும். நம் எதிர்கால சந்ததியினருக்கு இந்த நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லுமாறு அவர் அனைவரையும் எப்போதும் அழைத்தார். அதனால் தான் சுயேச்சை வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலுக்கு வருகிறார். சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதில் விசித்திரம் என்னவென்றால், அவரை விமர்சித்த பெரும்பான்மையினர் பின்னர் அவரைப் புரிந்துகொண்டு ஒன்றாகப் பயணம் மேற்கொள்வதுதான். அதற்கேற்ப இந்தத் தேர்தலில் வாக்கு வங்கி அமைகிறது. அதன் மூலம், நாம் ஒரு உரையாடலை உருவாக்கியுள்ளோம், நாம் எவ்வாறு ஒன்றிணைவது?ஒன்றாக ஒரு இலக்கை அடைவது எப்படி? இது ஒரு நாட்டின் எதிர்காலத்தைப் பார்க்கும் ஒவ்வொருவரும் கேட்கும் விஷயம் என்று நினைக்கிறேன். ஜனாதிபதி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தனக்காகவோ, ஒரு கட்சிக்காகவோ அல்லது எந்தவொரு குழுவுக்காகவோ அல்ல. இந்த நாட்டை இந்தப் பாதையில் கொண்டு செல்ல வேண்டுமானால், இலங்கையின் எதிர்காலத்தைப் பார்க்க வேண்டுமானால், அவர் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும். முக்கியமான விடயம் என்னவெனில், ஒரு இனமாகவும் தேசமாகவும் நாம் இலங்கையர்களாக நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவார். அதற்காக திரளக்கூடிய அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான நாட்டை உருவாக்குவோம். அதுவே எங்களின் சவாலும் இலக்கும் ஆகும் - என்றார். (அ)

# மண்சரிவு அபாயம்மிக்க 35 இடங்கள் அடையாளம்

கொழும்பு, ஓக. 07

நாட்டில் மண்சரிவு அபாயமுள்ள 35 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு அபாயமுள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த 35 இடங்களிலும் மண்சரிவு அனர்த்தங்களை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

(அ)

# ரயில் சேவைகள் இரத்து!

கொழும்பு, ஓக. 07

காணாமல் போன ஊழியர் ஒருவரைத் தேடுவதற்கு போதுமான தலையீடு செய்யவில்லை என குற்றஞ்சாட்டி தெமட்டகொடை ரயில் முனையத்தின் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக நேற்று காலை புறப்படவிருந்த உடரட்டமெனிக்கே மற்றும் பொடிமெனிக்கே ரயில்கள் இரத்து செய்யப்பட்டதாகத் ரயில் திணைக்கள பொதுமுகாமையாளர் என்.ஜே இந்திபொலகே தெரிவித்தார்.

அத்துடன் பல ரயில் சேவைகளில் தாமதம் ஏற்படக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தெமட்டகொடை ரயில் முனையத்தில் கடமையாற்றிய மாத்தறையைச் சேர்ந்த தொழில்நுட்பவியலாளர் ஒருவரே காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினை ஏற்படுத்துவதில் கைதேர்ந்தவர் ரணில்

## நாமல் ராஜபக்ஷ விசனம்



கொழும்பு, ஒக. 07

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிக்குள் கருத்து முரண்பாட்டை ஏற்படுத்தி பிரிவினை ஏற்படுத்துவதில் கைதேர்ந்தவர் என்றும் அதேவேளை, ஜனாதிபதிக்கும் தமக்கும் இடையில் எவ்வித ஒப்பந்த அரசியலும் இல்லை என்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு நேற்று முன் தினம் பொதுஜன பெரமுனவின் பிரதான அலுவலகத்தில் இடம்பெற்றது. அந்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சியின் அரசியல் குழுவில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக குறிப்பிடுகிறார்கள். அரசியல் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு ஆதரவு வழங்கி விட்டு மக்கள் மத்தியில் பொய் விமர்சனங்களை முன்வைப்பது ஏற்புடையதல்ல.

பொதுஜன பெரமுனவை விட்டுச் சென்றுள்ளவர்கள் மீண்டும் எம்முடன் ஒன்றிணைவார்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சலூன் கதவு திறந்துள்ளது என்று குறிப்பிடுவார். அதேபோன்று, விலகிச் செல்பவர்களை பலவந்தமாக தடுத்து வைக்க எம்மால் முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகளை பிளவுபடுத்துவதில் திறமையானவர். கொள்கைகளை முன்னிலைப்படுத்தி கட்சியுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்காமல், தனிப்பட்ட முறையில் கட்சியின் உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு கட்சிகளை பிளவுபடுத்துவது ஜனாதிபதியின் இயல்பாகும்.

ஜனாதிபதிக்கும் எமக்கும் இடையில் எவ்வித ஒப்பந்த அரசியலும் இல்லை. கட்சியின் கொள்கைக்கமைய, நாங்கள் தீர்மானம் எடுத்தோம். கட்சியின் உறுப்பினர் இல்லாத ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவது சாத்தியமற்றது. எமது ஜனாதிபதி வேட்பாளரை நாளை அறிவிக்க தீர்மானித்துள்ளோம். கட்சியை பாதுகாத்துக் கொள்வதற்காகவே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம்-என்றார். (அ)

# பங்களாதேஷ் ஸ்திர நிலைக்கு மிக விரைவாகத் திரும்பிவிடும்

## அமைச்சர் அலி சப்ரி நம்பிக்கை



கொழும்பு, ஒக. 07

அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு பங்களாதேஷ் விரைவாகத் திரும்பும் என தாம் நம்புவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் தமது உத்தியோகப்பூர்வ எக்ஸ் தளத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷுடனான நீடித்த நட்புறவைத் தொடர்ந்தும் மதிப்பதாகத் தெரிவித்துள்ள அவர், இந்த சவாலான தருணங்களில் பங்களாதேஷ் மக்களுடன் இலங்கை இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த குடும்பங்களுக்காகப் பிரார்த்திப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அங்கு அமைதி மற்றும் செழிப்பு நிறைந்த எதிர்காலத்தைத் தாம் எதிர்பார்ப்பதாகவும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார். (அ)

# கரடி தாக்கி 5 பேர் படுகாயம்

கொழும்பு, ஒக. 07

கிம்புலாவல, தியபெதும பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து பேர் நேற்று கரடி தாக்கியதில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தியபெதும பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பொலனறுவை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்பு காரணமாக, வனவிலங்கு அதிகாரிகள் கரடியை கருணைக் கொலை செய்ய முடிவு செய்து வேறு இடத்திற்கு கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளனர். (அ)

# தொழிலாளரின் சம்பள அதிகரிப்புக்கு எதிரான பெருந்தோட்ட நிறுவனங்களின் வழக்கு நிறைவு

கொழும்பு, ஒக. 07

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 1700 ரூபாவாக நிர்ணயித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்புக்கு எதிரான தமது மனுவை, பெருந்தோட்ட நிறுவனங்கள் மீளப்பெற்றுள்ளன.

இது தொடர்பான வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பெருந்தோட்ட நிறுவனங்கள் தமது தீர்மானத்தை அறிவித்தன.

இதன்படி குறித்த வழக்கினை நிறைவுறுத்துவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களது நாளாந்த வேதனத்தை 1700 ரூபாவாக, வேதன நிர்ணய சபையினூடாக அதிகரித்து, தொழில் அமைச்சினால் இரண்டு வர்த்தமானிகள் வெளியாக்கப்பட்டன.

எனினும் குறித்த இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து, கடந்த மாதம் புதிய வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டது.

இந்தநிலையிலேயே பெருந்தோட்ட நிறுவனங்கள், வேதன அதிகரிப்புக்கு எதிரான மனுவை விலக்கிக் கொள்வதாக நீதிமன்றில் அறிவித்தன.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களது நாளாந்த வேதனம் தொடர்பாக புதிய இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டிருப்பதாக ஏலவே தகவல்கள் வெளியாகி இருந்தன.

இதனை அண்மையில் உறுதிப்படுத்திய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பி.சக்திவேல், புதிய இணக்கப்பாட்டின் படி தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 1500 ரூபாய் வேதனம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

# மகிந்தவை தந்தை என கூறியோர் அவரைத் தனிமையாக்கிவிட்டனர்!

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 07

"ஒரு காலத்தில் மகிந்தவை தந்தையென்று கூறிக்கொண்டு அரசியல் மேடைகளில் உரிமையுடன் புகழ் பாராட்டிய பலர், அவரை முழுமையாக தனிமையாக்கி விட்டு கட்சி தாவி விட்டார்கள். தேர்தல் காலம் ஆரம்பித்து விட்டதால் கட்சித் தாவல்களுக்கு குறைவிருக்காது. எனவே, இது பாராளுமன்ற வாரம் என்பதால், தேர்தலை இலக்கு வைத்து மேலும் சில கட்சித் தாவல்களை பார்க்கக்கூடியதாக இருக்குமென சர்வஜன அதிகார அரசியல் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

சர்வஜன அதிகார கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எத்தனை வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டாலும் இன்று நாட்டிலிருக்கும் தீர்மானமிக்க சவால்களுடனான பிரச்சினைகள் தொடர்பில் சிந்தித்தால், பொதுமக்களுடன் விளையாடுவதற்கு எமக்கு உரிமை இல்லை. எனவே, இந்த ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கதாக இருக்கும்.

எங்களின் முதலாவது யோசனையை வெளியிட்டுள்ளோம். இரண்டாவது யோசனையை [illegible] வெளியிடுவோம். அது தொடர்பான கருத்தாடல்களின் பின்னர் இறுதி யோசனைகளை சமர்ப்பிக்க எதிர்பார்த்திருக்கிறோம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் மரத்துக்கு மரம் தாவும் சம்பவங்களும் ஆரம்பித்துவிட்டன. மொட்டு தொடர்பில் சிந்தித்து செயற்பட்ட பொதுஜன பெரமுனவுக்கு இன்று என்ன நிலைமை ஏற்பட்டுள்ளது என்பது மக்களுக்கும் தெளிவாக தெரிகிறது. பஸில் ராஜபக்ஷவினால், பொதுஜன பெரமுன தொடர்பில் சிந்தித்து தலைக்கு மேல் தூக்கிவைத்து பாலூட்டி வளர்க்கப்பட்டவர்கள் அந்த நம்பிக்கையை கைவிட்டு ரணில் விக்கிரமசிங்கவின் தரப்புக்கு தாவ ஆரம்பித்துள்ளார்கள்.

பஸில் பாலூட்டி வளர்த்த ரோஹித அபேகுணவர்தன, சந்திரசேன போன்றோர் மறுபக்கம் தாவியுள்ளனர். ஒரு காலத்தில் மகிந்தவை தந்தையென்று கூறிக்கொண்டு அரசியல் மேடைகளில் உரிமையுடன் புகழ்பாராட்டிய இவர்கள், அவரை முழுமையாக தனிமையாக்கிவிட்டார்கள்.

மகிந்தவும் இன்னும் 12 பேரே மீதமாகியுள்ளார்கள். அவர்களிலும் ஐவர் ராஜபக்ஷக்கள். அதேபோன்று, ராஜபக்ஷக்களில் ஒருவரும் ரணிலுக்கு ஆதரவளிப்பதற்காக வரவா என்று கேட்கிறார். இருந்தபோதும் நீங்கள் இந்த தரப்புக்கு வந்தால் மீண்டும் ராஜபக்ஷக்களுடன் இணைந்துகொண்டது போல் ஆகிவிடும் என்று ரணில் தரப்பினர் பதில் கூறியிருக்கிறார்கள். அதனால், நடுநிலையாக இருக்குமாறும் அறிவித்திருக்கிறார்கள்.

ராஜபக்ஷக்களுடன் இருக்கும் வரை அரசாங்கத்துடன் இணையப் போவதில்லை என்று ஒருசிலர் கூறியிருந்தார்கள். தற்போது அந்த தடை நீங்கியுள்ளது. அதனால், அடுத்த பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் இந்த வாரங்களில் மேலும் மரங்களுக்கு தாவும் சம்பவங்கள் இடம்பெறவுள்ளன என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியில் இருந்த காலம் முதல் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எங்களின் ஒரு நிலைப்பாட்டுக்காகவே நாங்கள் செயற்பட்டிருக்கிறோம். மற்றையவர்களினூடாக கிடைக்கும் அமைச்சுகளுக்காகவும் சுகபோகங்களுக்காகவும் வாய்ப்புகளுக்காகவும் எங்களின் கொள்கைகளை காட்டிக் கொடுத்தது இல்லை. எது எவ்வாறாக இருந்தாலும் கடந்த காலங்களை போன்று இந்த தேர்தலிலும் வெற்றியுடனேயே திரும்புவோம்-என்றார். (அ)

# மூத்த பிரஜைகளின் சிறப்பு வட்டி விகிதத்தை அமுல்படுத்த அனுமதி

கொழும்பு, ஒக. 07

மூத்த குடிமக்களின் நிலையான வைப்புத்தொகைக்கான சிறப்பு வட்டி விகிதத்தை மீண்டும் அமுல்படுத்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

தற்போது நிலையான வைப்புகளுக்கான வட்டி 8.5 வீதத்தால் கணிசமாக குறைந்துள்ளது.

இதன் விளைவாக, பெரும்பாலான மூத்த குடிமக்கள் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்கள் வைப்புகளை திரும்பப் பெற்றுள்ளனர். இதன்படி, 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புத்தொகைக்கு 10 வீத வருடாந்த வட்டி வீதத்தை 2 வருட காலத்திற்கு வழங்குவதற்கு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரிக நிலைக்கு நாட்டை உயர்த்தும் தலைவர் ஒருவரை நியமிக்க வாய்ப்பு!

## கலாநிதி ஹரினி அமரசூரிய கருத்து



கொழும்பு, ஒக. 07

**வரலாற்று ரீதியான மாற்றமொன்றை ஏற்படுத்தி நாட்டை நாகரிகமடைந்த நிலைமைக்கு உயர்த்தி வைக்கக்கூடிய தலைவர் ஒருவரை நியமித்துக் கொள்வதற்கான வாய்ப்பு நாளுக்கு நாள் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது என தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று பேரவை உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் வைப்புச் செய்யப்பட்ட வேளை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் நீண்டகாலமாக உழைத்தும் நீண்டகாலமாக காத்திருந்தும் இந்த தருணம் வரும்வரையே. இலங்கைக்கு சமூக நீதியை ஏற்படுத்துகின்ற, தெளிவான தூரநோக்கினைக் கொண்ட, நாகரிகமான தலைவர் ஒருவரை தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பு வரும்வரை நாங்கள் நீண்ட காலமாக காத்திருந்தோம்.

வரலாற்று ரீதியான மாற்றமொன்றை ஏற்படுத்தி நாட்டை நாகரிகமடைந்த நிலைமைக்கு உயர்த்தி வைக்கக்கூடிய தலைவர் ஒருவரை நியமித்துக் கொள்வதற்கான வாய்ப்பு நாளுக்கு நாள் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது.

எமது கட்சியின் தலைவர் தோழர் அநுரகுமார திசாநாயக்கவின் வேட்பு மனுக்காக நாங்கள் இன்று கட்டுப்பணத்தை வைப்புச் செய்தோம்.

இன்னும் 48 நாட்களில் நாட்டு மக்களை உயர்த்தி வைக்கக்கூடிய அந்த தோழரை, அந்த தலைவரை நியமித்துக் கொள்வதற்கான வாய்ப்பு வருகிறது.

இன்று இந்த தருணத்தில் அந்த வரலாற்று ரீதியான சந்தர்ப்பத்தின் பங்காளிகளாக அமையக்கிடைத்ததையிட்டு நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்-என்றார். (அ)

# ஒக. 15 முதல் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 07

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயத்தமாகும் வகையில், எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர் நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் இல்லாத நிலையில், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்கவுக்கு தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வை செய்யும் முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் இந்த முன்னேற்றங்கள் குறித்து தேர்தல் ஆணையத்திற்கு முறையாக அறிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் அனைத்து பொலிஸ் உத்தரவுகள், அதிகாரிகளை அனுப்புதல், தளவாட ஏற்பாடுகள் மற்றும் நிதி வழங்கல் ஆகியவை செயலாளரால் நிர்வகிக்கப்படும் என்பதை அவர் உறுதி செய்தார். தேர்தல்களுக்கு பொறுப் பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தலைமையில் ஒவ்வொரு மாகா ணத்திலும் உள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் அச்சுறுத்தல் மதிப்பீடுகளை நடத்துவதற்கும் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் முடிவடைந்த பின்னர், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒரு இணைப்பாளர் நியமிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஒவ்வொரு வேட்பாளருக்கும் நாங்கள் அச்சுறுத்தல் மதிப்பீட்டை நடத்துவோம், மேலும் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொறுப்பான குழுவானது பொருத்தமான பாதுகாப்பை தீர்மானிக்கும்" என்று பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறினார்.

முன்னதாக, வேட்பாளர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கான ஜனாதிபதியின் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. (அ)

# ஐஸ் வைத்திருந்த இருவர் கைது

கொழும்பு, ஒக. 07

கொழும்பில் இரு வெவ்வேறு பகுதிகளில் ஐஸ் போதைப்பொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, கொழும்பு, புறக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 32 கிராம் 200 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் புறக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புறக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு, கிராண்டபாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாதம்மாவத்த பகுதியில் 10 கிராம் 890 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கிராண்டபாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு ஊறுகொடவத்தை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரொருவரே கைது செய்யப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்டபாஸ் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சமுத்திரவியல் கற்கை நிலையத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக. 07

சமுத்திரவியல் கற்கைகளுக்கான பிராந்திய நிலையத்தை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையானது, இந்து சமுத்திரத்தை அண்டிய நாடுகளின் ஒன்றியத்தின் உறுப்பு நாடாக சமுத்திரப் பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்பாக மேற்கொண்டுள்ள பல்வேறு தொடக்க முயற்சிகளைக் கருத்திற் கொண்டு, பொதுவான கற்கைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுசார் விடயங்கள் மற்றும் நடவடிக்கைகளை பிராந்தியம் முழுவதும் பகிர்ந்து கொள்ளும் வகையில் "பிராந்திய சமுத்திரவியல் கற்கை நிலையமாக" இலங்கையை நிறுவுவது மிகவும் பொருத்தமானதென பிரான்ஸ் அரசு அடையாளம் கண்டுள்ளது.

முன்மொழியப்பட்ட நிலையமாக, ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வளாகத்தில் தாபிப்பதற்கும், அதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை திருகோணமலை கப்பல்துறை மற்றும் சமுத்திரவியல் கல்லூரி மூலம் பெற்றுக்கொள்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, உத்தேச பிராந்திய சமுத்திரவியல் கற்கை நிலையத்தை" தாபிப்பதற்கு ஏற்புடைய இலங்கை அரசு மற்றும் பிரான்ஸ் அரசுக்கிடையிலான இருதரப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. (அ)

# பெருந்தோட்ட ஆசிரியர்களுக்கான கல்வி மேம்பாட்டுத் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஒக. 07

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு, கல்வி அமைச்சு, மற்றும் இலங்கை தேசிய கல்வி நிறுவனம் இணைந்து நடத்தும் பெருந்தோட்டத் துறையின் ஆசிரியர்களுக்கான கல்வி மேம்பாட்டுத் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்திய தூதரகம் , நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு, கல்வி அமைச்சு, மற்றும் இலங்கை தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தலுடன் இந்த நிகழ்வானது அலரிமாளிகையில் நடைபெற்றது.

மேலும் இந்த ஆரம்ப நிகழ்வில் மத்திய, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களிலுள்ள சுமார் 2000 மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உதவி தூதுவர் கலாநிதி சத்தியஞ்சால் பாண்டே, தேசிய கல்வி நிறுவன பொது பணிப்பாளர் பேராசிரியர் பீரசாத் சேதுங்கல், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, கல்வி அமைச்சின் செயலாளர், அமைச்சு அதிகாரிகள் இந்தியாவில் இருந்து வருகை தந்த ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதி தேர்தல் காலங்களில் அமைச்சர்கள் பங்குகொள்ளும் நிகழ்வுகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு தடை விதித்துள்ளமையை கருத்திற்கொண்டு, முன்மாதிரியாக செயற்பட்டு இந்நிகழ்வில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்துகொள்ளவில்லை.

# 4020 பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு பொலிஸ் திணைக்களத்தில் வெற்றிடங்கள்

கொழும்பு, ஒக. 07

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் கீழ் 29,091 பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் 4020 பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுவதாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கடந்த 4ஆம் திகதி வெளியான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பணியிடங்களின் எண்ணிக்கை 60000 ஆகும்.

2023ஆம் ஆண்டின் இறுதியில், பொலிஸ் கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை 309,09 ஆகும். அதன்படி, 29,091 பொலிஸ் கான்ஸ்டபிள் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன.

எவ்வாறாயினும், 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதால், பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியில் 10,900 பொலிஸ் அதிகாரிகள் உள்ளதாக கணக்காய்வு அறிக்கை கூறுகிறது.

எனினும், இன்னும் வெற்றிடமாக உள்ள கான்ஸ்டபிள் பணியிடங்களின் எண்ணிக்கை 18,190 ஆகவும், அங்கீகரிக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பணியிடங்களில் 30 வீதம் வெற்றிடங்கள் இருப்பது பொது சேவைகளை நடத்துவதில் பல சிக்கல்களை உருவாக்கியுள்ளதாக தணிக்கையில் தெரியவந்துள்ளது.

மேலும் அங்கீகரிக்கப்பட்ட பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை 10000 ஆகும். அந்த பதவியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 4020 ஆகும்.

அதன்படி, ஆகஸ்ட் 2ஆம் திகதி வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 34 வீதமான பெண் பொலிஸ் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திராய்க்கேணி படுகொலை; உணர்வுபூர்வ நினைவேந்தல்



காரைதீவு, ஓக. 07

**அம்பாறை - திராய்க்கேணியில் இராணுவம், முஸ்லிம் ஊர்காவல் படைகளால் படுகொலை செய்யப்பட்ட 54 அப்பாவித் தமிழ் மக்களின் 34ஆவது நினைவுதினம் நேற்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.**

படுகொலை இடம்பெற்ற முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கொல்லப்பட்டவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி ஆலயத்தில் விசேட பூசை நடைபெற்றது.

தொடர்ந்து, படுகொலை சம்பவத்தில் கணவனை இழந்த பெண்கள் மற்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமது நினைவுகளை மீட்டி உரையாற்றினர்.

கடந்த 1990 ஓகஸ்ட் 6ஆம் திகதி திராய்க்கேணியை இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர். அங்கு நுழைந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் மற்றும் குண்டர்கள் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த 54 பொதுமக்களை சுட்டும் - வெட்டியும் கொன்றனர்.

இந்தச் சம்பவத்தில் 13 வயது சிறுமி ஒருவர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இந்த வன்முறையின் போது தமிழ் மக்களுக்கு சொந்தமான வீடுகள் எரியூட்டப்பட்டன. திராய்க்கேணியிலிருந்து இடம்பெயர்ந்து காரைதீவு அகதிமுகாமில் தஞ்சமடைந்த பொதுமக்கள் மீண்டும் 4 ஆண்டுகள் கழித்தே சொந்த இடம் திரும்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)



# விபுலானந்த சுவாமிகளின் துறவற நூற்றாண்டு விழா!

காரைதீவு, ஓக. 07

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயமும் இணைந்து நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா தொடர் நிகழ்வு அந்தப் பாடசாலையின் அதிபர் எஸ். குணராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிமனையின் இந்து சமய பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் ம. லக்குணம், பிரதி அதிபர் எஸ்.கோகுலராஜ் திருமதி புண்ணியமலர், கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நா. சிறீபிரியா, நா. சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக விபுலானந்த சுவாமியின் திருவுருவ படங்களை சமயப் பற்றாளர் மகேந்திரன் வழங்கி வைத்தார். (ஐ-10)

# 34 வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை!

## காரைதீவு முன்னாள் தவிசாளர்

காரைதீவு, ஓக. 07

திராய்க்கேணியில் 54 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு 34 வருடங்கள் கடந்தும் இன்னமும் நீதி கிடைக்கவில்லை என்று காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில் தெரிவித்தார்.

திராய்க்கேணி படுகொலையின் 34ஆவது நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சுதந்திரத்துக்கு பின்னர் திட்டமிட்டவகையில் 1956, 1985, 1990, 2009 வரை தமிழ் மக்கள் திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஆனால் இதுவரை இந்தப் படுகொலைகளுக்கு நீதியோ, நஷ்டஈடோ கிடைக்கவில்லை. எந்த இனமாக இருந்தாலும் ஆலயம் என்பது புனிதமானது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் இந்து ஆலயங்களில்தான் அதிகமான படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. அரசாங்கமே இராணுவத்தையும் முஸ்லிம் ஊர்காவல் படையினரையும் பயன்படுத்தி இந்த திட்டமிட்ட படுகொலையை செய்தது.

வீரமுனையிலும் ஆலயத்தில் வைத்து நூற்றுக்கணக்கான அப்பாவி தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்த வரலாற்றை எல்லாம் நாங்கள் அடுத்த சந்ததிக்கு எடுத்து செல்ல வேண்டும். சமகால சந்ததியினர் சுதந்திரமாக நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக இத்தகைய நிகழ்வுகள் நடைபெறுகின்றன - என்றார். (ஐ-10)

# நுகர்வோர் சட்டத்தை மீறிய 77 வர்த்தகர்களுக்கு அபராதம்!

அக்கரைப்பற்று, ஓக. 07

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஜூலை மாதம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 77 வர்த்தகர்களுக்கு நீதி மன்றங்களால் 3 இலட்சத்து 22 ஆயிரத்து 499 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ். என். எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் நடத்திய சோதனையில் சட்டத்தை மீறிய 77 வர்த்தகர்களுக்கு அந்தந்த நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பள்ளிவாசல்கள் பதிவு மீண்டும் ஆரம்பமானது

கொழும்பு, ஓக. 07

பள்ளிவாசல்களை பதிவு செய்யும் நடவடிக்கை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் புதிய பள்ளிவாசல்களை பதிவு செய்கின்ற நடவடிக்கைகளை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அமைச்சின் உத்தரவுக்கமைய நிறுத்தி வைத்திருந்தது.

அதன்பின்னர் இவ்விடயம் சம்பந்தமாக பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்த நிலையில், புதிதாக திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையை பொறுப்பேற்றுள்ள எம்.எச்.ஏ. எம். றிப்லான், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் மற்றும் இலங்கை வக்ப் சபையின் உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ. மத்தீன் ஆகியோர் இவ்விடயம் சம்பந்தமாக புத்த சாசனம் மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் செயலாளரோடு பல சுற்று பேச்சுகளை நடத்தியதை அடுத்து பதிவு நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

இதன்படி, கடந்த முதலாம் திகதி முதல் பள்ளிவாசல்கள் பதிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நவீன கூட்டுறவு சங்க கிளை அமிர்தகழியில் நேற்று திறப்பு

மட்டக்களப்பு, ஓக. 07

மட்டக்களப்பு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் அமிர்தகழி கிளை நேற்று செவ்வாய்க்கிழமை நவீன மயப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் டி. காந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. வி. தங்கவேல், மட்டக்களப்பு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் அமிர்தகழி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின்



கிளைக்குழு தலைவர் டி. ராஜேந்திரன் மற்றும் மட்டக்களப்பு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்கள், ஊழியர்கள், பொது மக்கள் என பலர் நிகழ்வில் பங்கேற்றனர்.

# மாணவர் சந்தை நிகழ்வு



அக்கரைப்பற்று, ஓக. 07

அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் உயர்தர பாடசாலையின் மாணவர் சந்தை நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆரம்ப பிரிவின் தலைவர் எம். ஐ. ஜெஸ்பரின் நெறிப்படுத்தலில் அதிபர் ஏ. சீ. நியாஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், மணவர்கள், என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் வெளியேறியபின் தொடர்ந்த வன்முறைகளில் 119 பேர் உயிரிழப்பு

## விமான நிலையமும் மூடப்பட்டது



டாக்கா, ஓக. 07

**பங்களாதேஷில் இருந்து ஷேக் ஹசீனா வெளியேறிய பிறகும் தலைநகர் டாக்கா மற்றும் சில பகுதிகளில் வன்முறை இடம்பெற்றது. இதில் 119 பேர் பலியாகினர்.**

பங்களாதேஷில் கடந்த சில வாரங்களாக ஏற்பட்ட தொடர் வன்முறையையடுத்து, பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை துறந்து இராணுவ விமானம் மூலம் வெளியேறினார்.

இதனால் பங்களாதேஷில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியுள்ளது. இதனால் பங்களாதேஷில் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. ஷேக் ஹசீனா பங்களாதேஷிலிருந்து வெளியேறிய பிறகும் தலைநகர் டாக்கா மற்றும் சில பகுதிகளில் வன்முறை நிகழ்ந்துள்ளது.

டாக்காவில் போராட்டக்காரர்கள் பிரதமர் மாளிகைக்குள் சென்று சூறையாடினர். ஹசீனாவுக்கு சொந்தமான நிறுவனங்களும் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. மேலும் அந்த நாட்டு அமைச்சர்கள், எம்.பி.க்களின் வீடுகளும் தாக்கப்பட்டன.

பிரதமர் வெளியேறிய பின்னும் தொடர்ந்த வன்முறைகளில் 119 பேர் கொல்லப்பட்டனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. இதேநேரம், இந்த வன்முறைகளில் 440 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தினம் பங்களாதேஷ் ஓரளவுக்கு வழமைக்கு திரும்பிய போதிலும், அந்த நாட்டு விமான நிலையம் மூடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஈரானின் எந்த தாக்குதலையும் சந்திக்கத் தயாராகவுள்ளோம்!

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு


ஜெருசலேம், ஓக. 07

ஈரானின் எத்தகைய தாக்குதலையும் சந்திப்பதற்கு தயாராக இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார்.

ஈரானில் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா தலைவர்கள் அடுத்தடுத்து மரணமடைந்தமையைத் தொடர்ந்து, மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்த படுகொலைகளுக்கு இஸ்ரேல்தான் காரணம் என கூறப்படும் நிலையில் அதன் மீது போர் தொடுக்க ஈரான் மற்றும் அதன் ஆதரவு நாடுகள் ஆயத்தமாகி வருகின்றன.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா, ஏமனில் உள்ள ஹவுத்தி தீவிரவாதிகள் மற்றும் ஈரான் ராணுவம் ஆகியவை ஒரே நேரத்தில் இஸ்ரேலை மீது தாக்குதல் நடத்த ஆயத்தமாகி வருகின்றனர்.

நாளுக்கு நாள் போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் பல வெளிநாட்டு விமான நிறுவனங்கள் இஸ்ரேலுக்கான அனைத்து விமான சேவைகளையும் நிறுத்தியுள்ளன. தனது



குடிமக்களை அழைத்து வர இஸ்ரேல் தனது நாட்டு எல்-அல் விமான சேவை, படகு சேவைகளை பயன்படுத்தி வருகிறது.

இதற்கிடையே, வடக்கு இஸ்ரேல் பகுதிகள் மீது நேற்று முன்தினம் அதிகாலை ட்ரோன் தாக்குதலை நடத்தியதாக லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு கூறும் போது, "ஈரானின் தீய சக்திக்கு எதிராக இஸ்ரேல் பலமுனை போரில் ஈடுபட்டுள்ளது. ஈரானின் எத்தகைய தாக்குதலையும் சந்திக்க இஸ்ரேல் தயாராக இருக்கிறது" என்றார். (ஐ)

# சட்டவிரோதமாக கூகுள் நிறுவனம் செயல்பட்டது

## அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு

நியூயோர்க், ஓக. 07

இணையத் தேடலில் கூகுள் நிறுவனம் 90 சதவீதத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக சட்டவிரோதமாக செயல்பட்டுள்ளது என்று அமெரிக்க நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, கடந்த 2020ஆம் ஆண்டு அமெரிக்க நீதித்துறை கூகுள் மீது வழக்குத் தொடர்ந்துள்ளது. இந்த வழக்கு ஓராண்டுக்கும் மேலாக, நிலுவையில் இருந்தது.

இந்நிலையில், தற்போது அனைத்து வாதங்களும் நிறைவடைந்தன. இந்த வழக்கில், அமெரிக்க நீதிபதி அமித் மேத்தா அளித்த தீர்ப்பில், "கூகுள் நிறுவனம், தேடல் சேவையில் தேடுபொறியில் 90 சதவீதத்தையும், தொலைபேசிகளில் 94.9 சதவீதத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

கூகுள் தேடுபொறியானது போட்டிகளை தடுக்கவும், ஏகபோக உரிமையைப் பேணுவதற்கும் சட்டவிரோதமாக செயல்பட்டுள்ளது" என தீர்ப்பளித்த நிலையில், கூகுள் இதற்கு எதிராக வழக்கு தொடர உள்ளதாக கூறப்படுகிறது.

# சூடானில் வெள்ளம்; 32 பேர் உயிரிழப்பு!

கார்டூம், ஓக. 07

சூடானில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் 32 பேர் உயிரிழந்தனர். 5 ஆயிரத்து 575 வீடுகள் சேதமடைந்துள்ளன. 7 மாநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் சில பகுதிகளில் மழையால் மக்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கஸ்ஸாலா மாநிலத்தில் 102 பேரும், கார்டூம் மாநிலத்தில் 4 பேரும் மற்றும் கெசிரா மாநிலத்தில் 16 பேரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, குடிமக்கள் எச்சரிக்கையாக இருக்கவும், பருவ



கால ஆற்றின் கரையோரங்களில் இருந்து மக்கள் விலகி இருக்கவும் வலியுறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்க படைத்தளம்மீதான தாக்குதலில் பலர் படுகாயம்!


பாக்தாத், ஓக. 07

ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவதளம் மீது மேற்கொள்ளப்பட்ட ஏவுகணை தாக்குதலில் அமெரிக்க இராணுவத்தினர் பலர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்க இராணுவ அதிகாரிகள் இதனை உறுதி செய்துள்ளனர்.

ஹமாஸ் தலைவர், ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதி ஆகியோரின் இறப்புக்கு பழிவாங்கும் விதத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அல் அசாத் விமானப்படைதளத்தில் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து மதிப்பிட்டு வருவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



எனினும், இதுவரை எந்த குழுவும் இந்த தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை. (ஐ)

# பிரதமர் ஷேக் ஹசீனா இனி அரசியலுக்கு வரமாட்டார்!

## அவரின் மகன் அறிவிப்பு

டாக்கா, ஓக. 07

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இனி அரசியலுக்கு திரும்ப மாட்டார் என்று அவரின் மகனும் தலைமை ஆலோசகருமான சஜீப் வஜீத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனியார் ஊடகத்திடம் தெரிவித்த அவர், "இவ்வளவு கடின உழைப்புக்குப் பிறகு சிறுபான்மையினர் தனக்கு எதிராக திரும்பியதால் ஷேக் ஹசீனா மிகவும் அதிருப்தியடைந்து விட்டார். ஷேக் ஹசீனா பிரதமர் பதவியில் இருந்து விலகுவது குறித்து ஞாயிற்றுக்கிழமை முதல் ஆலோசித்து வந்தார். இனி அவர் அரசியலுக்கு திரும்பி வரமாட்டார்.

அவர் இந்த நாட்டையே தலைகீழாக மாற்றினார். அவர் ஆட்சிக்கு வரும்போது இது ஒரு வீழ்ச்சியடைந்த நாடாக இருந்தது. ஏழை நாடாக கருதப்பட்டது. ஆனால் இப்போது இந்த நாடு ஆசியாவின் அதிகம் வளரும் நாடுகளில் ஒன்றாக இருக்கிறது.

நேற்று மட்டும் கலவரத்தில் 13 பொலிஸார் உயிரிழந்தனர். கலவரக்காரர்கள் மக்களை கொல்லும்போது பொலிஸார் என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?" இவ்வாறு சஜீப் வஜீத் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீலங்கா சுதந்திர கட்சி ரணிலுக்கே முழு ஆதரவு!

## லசந்த அழகியவண்ண அறிவிப்பு

கொழும்பு, ஓக. 07

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க சுதந்திரக் கட்சி உத்தியோகபூர்வமாக தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.**



சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நிறைவேற்றுச் சபையின் 90 வீதமானோரின் இணக்கப்பாட்டுடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் சுதந்திரக் கட்சியின் பலமான வலையமைப்பு ஏற்கனவே செயற்பட ஆரம்பித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தை எமது கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் செயலாளர் நாயகம் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க உட்பட கட்சியின் தலைவர்கள் மாத்திரமின்றி சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பொதுஜன பெரமுனவின் கீழ் பாராளுமன்றத்துக்கு தெரிவான 14 உறுப்பினர்களில் 8 உறுப்பினர்கள் இந்த தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். (அ)

# இதுவரை 60 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஓக. 07

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரையில் 60 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அரச அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என அதன் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அரசியல் நோக்கங்களுக்காக சில அரச நிறுவனங்களின் சிரேஷ்ட பதவி நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியமை, பூரணப்படுத்தப்படாத அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்தமை உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என அவர் குறிப்பிட்டார். (அ)

# அரசின் முக்கிய 2 திட்டங்களை நிறுத்தியது தேர்தல் ஆணையம்

கொழும்பு, ஓக. 07

சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டம் மற்றும் உறுமய காணி உறுதித் திட்டம் ஆகிய இரண்டு முக்கிய அரசாங்கத் திட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு இலங்கை தேர்தல் ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை இந்த வேலைத்திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாக அதிகாரி தெரிவித்தார். (அ)

# சஜித்தின் பிரசாரம் ஓக.16இல் ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 07

சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்வரும் 8 ஆம் திகதி மலரவுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி குருநாகலில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணியால் மிகவும் பிரமாண்டமான முறையில் முன்னெடுக்கப்படும் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் இதுவாகும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை எதிர்வரும் 15 ஆம் திகதி தாக்கல் செய்த பின்னர், சஜித் பிரேமதாச ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார். மறுநாள் முதல் தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகும்.

பிரதானக் கூட்டங்களில் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து பங்காளிக் கட்சித் தலைவர்களும் பங்கேற்பார்கள். கிராமிய மட்டங்களில் நடைபெறும் கூட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமை தாங்குவார்கள். (அ)

# ஓய்வூதியம் பெறுவோருக்கு எங்கள் அரசில் நிவாரணம்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 07

ஓய்வூதியம் பெறுநர்களுக்கு பல்வேறுபட்ட நிவாரணங்களை ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பெற்றுக் கொடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

விசேட தேவையுடைய ஓய்வு நிலை பொலிஸ் சங்கத்தினருடனான சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஓய்வூதியம் பெறுநர்களுக்காக தற்போது வழங்கப்படும் கொடுப்பனவு போதுமானதல்ல.

அந்தக் கொடுப்பனவை அதிகரிக்குமாறு நாடாளுமன்றம் உள்ளிட்ட பல இடங்களில் நான் கோரிக்கை விடுத்தேன்.

ஓய்வூதியம் பெறுநர்கள் தங்களது சேவைக் காலத்தில் நாட்டின் அபிவிருத்திக்காக கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டவர்களாவர்.

அவர்களுக்கு உரிய கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

எனவே ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுநர்களுக்கு பல்வேறுபட்ட நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்-என்றார்.

இடைக்காலக் கொடுப்பனவு:

# திறைசேரிச் செயலாளருடன் செந்தில் தொண்டமான் பேச்சு!

கொழும்பு, ஓக. 07

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான இடைக்கால நிவாரணம் தொடர்பாக திறைசேரிச் செயலாளர் சிறிவர்தனவுடன் , கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இக்கலந்துரையாட லின் போது பெருந்தோட்ட சமூகத்தினரை உள்வாங்கக்கூடிய ஏனைய நலன்புரி நலன்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும்வரை, இடைக்காலக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை செந்தில் தொண்டமான் முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பொன்சேகா இராஜினாமா?

கொழும்பு, ஓக. 07

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா இராஜினாமா செய்யவுள்ளார் என தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக களமிறங்குவதற்குரிய கட்டுப்பணத்தை பொன்சேகா நேற்று முன் தினம் செலுத்தினார்.

இந்நிலையிலேயே அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து விலகவுள்ளார் என தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் பொன்சேகா முரண்பட்டுவந்தாலும் தவிசாளர் பதவியில் இருந்து அவரை நீக்க முடியாமல் இருந்தது. இதற்கு எதிராக பொன்சேகா நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவர் பதவி விலகவுள்ளார் என தெரியவருகின்றது.

# கிளப் வசந்தவின் நிர்வாண படம் வெளியானது குறித்து விசாரணை

கொழும்பு, ஓக. 07

அத்துருகிரிய பச்சை குத்தும் மையத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கிளப் வசந்த என்ற வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேராவின் சடலத்தின் நிர்வாணப் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியானமை தொடர்பாக ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சுமார் 30 பேரிடம் சாட்சியங்களை பதிவு செய்துள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலத்தின் பிரேத பரிசோதனைக்காக இணைந்த மருத்துவ மாணவர்கள் ஊடாக குறித்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மேலும், கொலைச் சம்பவம் தொடர்பான காணொளிக் காட்சிகளை வெளியிடும் பணியில் ஈடுபட்டிருந்த உள்ளூர் ஊடகவியலாளர்களிடம் இருந்து குறிப்புகள் மற்றும் உண்மைகளை எடுத்துக் கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# முட்டைகள் இறக்குமதிக்கு பண்ணையாளர் எதிர்ப்பு!

கொழும்பு, ஓக. 07

முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு அகில இலங்கை கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு முட்டைகளை இறக்குமதி செய்யவுள்ளதாக அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

தான்தோன்றித்தனமான அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக அகில இலங்கை கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் மத்தலி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

உற்பத்தி செலவினம் அதிகரித்துள்ளதன் காரணமாக முட்டைகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், அரசாங்கம் நிவாரணங்களை வழங்கும் பட்சத்தில் முட்டைகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்...

அண்மையில் அனுமதி வழங்கியது.

ஆரம்பகால முன்மொழிவுகளின்படி ஓர் இந்திய கட்டமைப்பாளர் ஒருவர் குறித்த திட்டத்தை நிறைவேற்றுவார் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கே.டி. எஸ். ருவன்சந்திரா தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர், இந்தியா 30 ஆண்டுகளுக்கு அதன் வணிகச் செயல்பாடுகளை முன்னெடுக்க முயன்றதாகக் குறிப்பிட்டார். "எவ்வாறாயினும், குறித்த விடயம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை," என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ- ஐ)

## சஜித்துக்கே...

அண்மையில் கூடிய கட்சியின் அரசியல் உயர்பீட கூட்டத்தின்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் எமது ஆதரவையும் பூரண பங்களிப்பையும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் எமது அரசியல் குழுவின் முடிவின்படி, ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## மொட்டுவின்...

என அவர் கூறினார்.

இந்த நிகழ்வு கட்சி அலுவலகத்தில் இன்று காலை 7:00 மணிக்கு நடைபெற உள்ளதாக மிலிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன ஆரம்பத்தில் இருந்து கூறியது போன்று கட்சியில் இருந்து ஜனாதிபதி வேட்பாளரை முன்வைக்கும் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படாது எனவும் பெரமுனவின் வேட்பாளர் தொழிலதிபர் தம்மிக்க பெரேராவே எனவும் மிலிந்த ராஜபக்ச குறிப்பிட்டார்.

ஆடல், பாடல் உள்ளிட்ட பல அம்சங்களுடன் வேட்பாளர் நாட்டுக்கு அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

## தேர்தலில்...

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முற்பகல் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுன மக்கள் ஆதரவு உள்ள பலமிக்க ஒரு கட்சியாகும். கட்சித் தாவல்கள் இடம்பெற்றாலும் மக்களை மாற்ற முடியாது.

கட்சி என்ற ரீதியில் நாம் கொள்கைகளுக்கு இணங்கியே செயற்படுவோம். அரசியலில் நீண்டகால அனுபவம் கொண்ட எமது கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சரியான தீர்மானத்தினையே மேற்கொள்வார்.

பொதுஜன பெரமுன மக்கள் ஆதரவினால் கட்டியெழுப்பப்பட்ட ஒரு கட்சியாகும். எனவே நாட்டு மக்கள் மத்தியில் இன்று குழப்பம் ஏற்படுத்தும் வகையில் பலர் செயற்படுகின்றனர்.

பொதுஜன பெரமுனவுக்குள் பாரிய பிளவு காணப்படுவதாகவும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். நாம் ஒரு விடயத்தை தெரிவித்து கொள்கின்றோம். தேர்தலில் எமக்கு எவரும் சவால் அல்லர் - என்றார். (அ)

## ஓக.30...

நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதிக்கும் விடுதலைக்குமான போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

ஈழ மண்ணில் அரசாங்கத்தால் இன வழிப்பு நோக்கத்துக்காக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளின் விடுதலை மற்றும் நீதியை வலியுறுத்தி - சர்வதேச சமூகத்தின் நீதிக்கான தலையிடலை வலியுறுத்தி - காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30ஆம் நாளன்று நாம் முன்னெடுக்கவுள்ள போராட்டத்துக்கு தாயகத்திலும் புலத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ள அமைப்புகளும் பிரதிநிதிகளும் மக்களும் ஒத்துழைப்பை வழங்குமாறு அன்பாக வேண்டி நிற்கின்றோம் - என்று கூறினர். (ஐ)

## இலங்கை...

இதன்போது, இலங்கை சிறைகளில் உள்ள இந்திய மீனவர்களை விடுவித்தல், இலங்கை-இந்திய பிரதிநிதிகள் சந்திப்பை ஏற்படுத்தல், மீனவர்களுக்கான இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளைத் தமிழக மீனவர்கள் முன்வைத்திருந்தனர்.

அது தொடர்பில் ஆராய்ந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இந்திய மற்றும் இலங்கை தரப்பில் தலா 4 அதிகாரிகளுடன் கூடிய குழுவொன்றின் ஊடாக மீனவ பிரச்னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இந்த இருதரப்பு ஆய்வுக்குழு விரைவில் கூட இருக்கிறது. அப்போது அனைத்து பிரச்னைகளும் சுமுகமாகத் தீர்க்கப்படும். அதில் தங்களது பிரச்னைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அத்துடன், மீனவர்களின் குறைகளுக்கு உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். (அ)

## லண்டனில்...

வன்முறைகளில் இதுவரை 400 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்

வன்முறைகளில் ஈடுபட்ட குற்றவாளிகளை தடுத்து வைக்க 500இற்கும் மேற்பட்ட மேலதிக சிறை அறைகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. வன்முறைகளை கட்டுப்படுத்த 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசேட பொலிஸார் களமிறக்கப்படுவார்கள் என்று பிரிட்டன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்தவாரம் முதல் தலையெடுத்த இந்த வன்முறைகள் புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மருக்கு முதலாவது கடுமையான நெருக்கடி தோன்றியுள்ளது.

இந்த நிலையில், லண்டனில் ஈழத் தமிழர்கள் அதிகமாக வாழும் இடங்களில் ஒன்றான ஹரோவை புதன் கிழமை இரவு 8 மணிக்கு அதிதீவிர வலதுசாரி குண்டர்கள் குறிவைக்கப் போவதான தகவல்கள் கிட்டியுள்ளன என்று ஹரோ சட்ட மையத்தின் இயக்குநர் பமீலா ஃபிட்ஸ்பட்றிக் தகவல் வெளியிட்டிருந்தார். இதையடுத்து, எச்சரிக்கை தகவல்கள் சமூகவலைதளங்களில் வேகமாகப் பரவிவருகின்றன.

முன்னதாக, சௌத்போர்ட் நகரத்தில் கடந்தவாரம் மூன்று சிறுமிகள் 17 வயதான ஆயுததாரி ஒருவரால் கத்தியால் குத்திகொல்லப்பட்டனர். இதனை செய்தவர் ஒரு முஸ்லிம் புகலிடக் கோரிக்கையாளர் என்று பரவிய வதந்தியை தொடர்ந்து வன்முறைகள் வெடித்தன. இதேபோனறதொரு வன்முறை கடந்த 2011ஆம் ஆண்டிலும் பிரிட்டனில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 4 வாகனங்கள் மோதி கோர விபத்து; இருவர் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, ஓக. 07

மத்தேகொடை பிரதேசத்தில் உள்ள பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக மத்தேகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தின் போது முச்சக்கர வண்டி ஒன்றும், இரண்டு மோட்டார் சைக்கிள்களும் காரொன்றும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிள்களின் செலுத்துநர்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

காயமடைந்தவர்கள் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## பிரபல நடிகரின் மனைவி என கூறிய பெண் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, ஓக. 07

பிரபல நடிகர் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளரின் மனைவி என கூறிக்கொண்ட பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்தப் பெண் நேற்று முன் தினம் இந்தியாவில் இருந்து இலங்கை வந்த போது குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நிதி மோசடி குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் அவருக்கு பயணத் தடை விதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியர் என கூறிக்கொள்ளும் இந்த 37 வயதுடைய பெண் குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் இந்தியாவின் புதுடில்லியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண் விமான நிலைய பொலிஸாரால் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## 48 பாடசாலைகளுக்கு தண்ணீர் வசதி இல்லை!

கொழும்பு, ஓக. 07

நாடு முழுவதிலும் நீர் வசதியற்ற 48 பாடசாலைகளும் மின்சார வசதி இல்லாத 15 பாடசாலைகளும் இனங்காணப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அதன்படி பாதுகாப்பான நீர் வசதி இல்லாத 983 பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## பதவி...

இந்நிலையில் நாமல் ராஜபக்ஷவின் வெற்றிடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த நியமிக்கப்பட்டுள்ளார் என சபாநாயகர் அறிவித்துள்ளார். (அ)

## அநுரவும்...

அலுவலகத்துக்கு சென்று பணத்தை செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இது வரை 17 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். (அ)

## நிலையான...

வர்த்தக முதலீடுகள் ஊடாக உலகளாவிய நிதி வசதிகளை ஈர்ப்பதுடன், பெருந்தோட்டத் துறையை பெருந்தோட்டத் தொழிலில் இருந்து விவசாய வணிகமாக மாற்றுவது, நிலையான சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு மற்றும் உற்பத்திகளை மேம்படுத்துதல் மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் என்பன இதன் பிரதான வேலைத் திட்டங்களாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடந்த சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவற்றை கூறினார்.

மேலும், தெற்காசியாவில் உள்ள அனைத்து நாடுகளிடையே நமது நாடு சிறந்த நாடு என்றே கூற வேண்டும். மாலைதீவு நம்மைப் போன்ற நாடாகும். ஆனால், அது மிகச் சிறிய நாடு. ஏனைய நாடுகள் அதற்கு தயாராக இல்லை என்று நினைக்கிறேன். எனவே, நாம் இதில் முதன்மையானவராக இருக்க வேண்டும்.

உலகம் இன்னும் கோவிட்-19 தொற்றுநோயிலிருந்து மீண்டு வருகிறது. சீனாவின் பொருளாதாரம் இன்னும் முழுத்திறனுடன் செயல்படவில்லை. அதற்கு இன்னும் சில வருடங்கள் செல்லும். உலகின் இரண்டு முக்கிய பொருளாதாரங்கள் மீது நாம் கவனம் செலுத்த வேண்டும். ஐரோப்பா முன்னோக்கி நகர்ந்தாலும் அதில் சிக்கல்களும் உள்ளன. இந்தச் சூழலில்தான் நிலையான வளர்ச்சி இலக்குகள் மீது நாம் கவனம் செலுத்துகிறோம்.

ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை விட்டு விலகிய போதிலும், நாங்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்தபோது அவர் 20 கோடி டொலர்களை நம் நாட்டுக்கு வழங்கியதை நான் நினைவுகூர வேண்டும்.

சிறையிலிருந்து காலிதா ஜியா விடுதலை செய்யப்பட்டதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஷேக் ஹசீனா நீண்ட காலத்துக்கு முன்பே இதைச் செய்திருந்தால், அவர் இன்னும் பங்களாதேஷின் பிரதமராக இருந்திருக்க முடியும். பங்களாதேஷில் நிலைமை விரைவில் சீரடையும் என்று நம்புகிறோம்.

குறுகிய காலத்தில் பங்களாதேஷ் மீண்டு வரும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. இலங்கையில் எங்களுக்கு நடந்ததை நினைவில் கொள்ள வேண்டும். பங்களாதேஷின் மிகப்பெரிய முதலீட்டாளர்களில் ஒருவராக நாங்கள் இருப்பதால், அந்த நாட்டில் வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம். இவ்வுலகில் நிலைமைகள் சரியில்லை என்பதை இந்நிகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன. ஆனால், இந்த திட்டங்களில் இருந்து இலங்கை விலகும் என்று அர்த்தமில்லை.

இந்த உலகளாவிய சூழலில், இலங்கையில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு சட்டம் தயாரிக்கும் பணிகளை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வைத்தியசாலையில் இளம்தாய் மரணம் சிலர் தவறிழைத்துள்ளமை கண்டுபிடிப்பு

## மன்னார் வைத்தியசாலைப் பணிப்பாளர் தகவல்

மன்னார், ஓக. 07

**மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பட்டதாரியான இளம் தாய் ஒருவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட சுயாதீன விசாரணைக் குழுவின் விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில் சம்பவ தினத்தின்போது சிலர் தவறிழைத்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா தெரிவித்தார்.**

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த சம்பவமானது கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்த இளம் தாய் பட்டப்படிப்பை நிறைவு செய்த மரிய ராஜ் சிந்துஜா (வயது-27) என தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் மரணத்தின் போது சம்பவ தினம் விடுதியில் இருந்தவர்களின் அசமந்தப் போக்கே காரணம் என குற்றம் சுமத்தப்பட்டது.

குறித்த மரணம் தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் சுயாதீன விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து துரித விசாரணைகளை முன்னெடுத்தது.

குறித்த விசாரணை நிறைவடைந்துள்ளது. விசாரணைகளின் அடிப்படையில் சிலர் தவறிழைத்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக விசேட அறிக்கை வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மேலதிக நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைக் குழு ஒன்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைகள் முடிவடைந்தவுடன் தவறிழைத்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மேலும் குறித்த பெண்ணின் மரணம் தொடர்பாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து எனது தொலைபேசிக்கு பல்வேறு அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது.

குறித்த அச்சுறுத்தல் குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன் - என்றார். (அ)

# பெரமுனவின் மாத்தளை மாவட்ட சபையும் ரணிலுக்கு முழு ஆதரவு

கொழும்பு, ஓக. 07

பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட சபையின் ஆதரவையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்டக் குழு, பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்டத் தலைவருமான ஜனக பண்டார தென்னக்கோன் தலைமையில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் தம்புள்ளையில் கூடியது.

அங்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்குமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் அழைப்பாளர்கள், முன்னாள் மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் மாவட்ட இணைப்பு அமைப்புகளின் தலைவர்கள் இந்தக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.(அ)

# வாக்குச் சீட்டின் நீளம் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 07

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டின் நீளம் 27.5 அங்குலங்களாக இருக்கும் என தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

கடந்த முறை வாக்குச் சீட்டின் நீளம் 26.5 அங்குலங்களாக காணப்பட்டது.

அதன்படி, வாக்குச் சீட்டை அரை அங்குலத்தை அதிகரிப்பதாயின் பொதுமக்களின் 200 மில்லியன் ரூபாயை மேலதிகமாக செலவிட நேரிடும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் 78 அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்று வரை இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 17 வேட்பாளர்களுக்கு கட்டுப்பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி வேட்புமனுக்கள் ஏற்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸ், காணி கட்டளைகளை நிறைவேற்றவே அவசரமாக மாகாணத் தேர்தல் திருத்தச் சட்டம்!

## விமல் வீரவன்ஸ எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 07

மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி தொடர்பிலான கட்டளைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கிலேயே மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலான திருத்தச் சட்டம் அவசர அவசரமாக கொண்டுவரப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவிததார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கால எல்லைகள் எதுவுமின்றி மாகாண சபைத் தேர்தலை நல்லாட்சி அரசாங்கம்தான் பிற்போட்டது. தேர்தல் பிற்போடப்பட்டு பல வருடங்களாகிவிட்டன.

ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெற உள்ள இத் தருணத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பான திருத்தச்சட்டமொன்று அவசரமாக கொண்டுவருவதன் நோக்கம் என்ன?

மாகாண முதலமைச்சருக்கு சார்பான வகையில் ஆளுநர் ஒருவரை நியமித்துக்கொள்ளும் அதிகாரம் வழங்கப்படுவதன் ஊடாக பொலிஸ் கட்டளைகள், காணி கட்டளைகள், சூழல் கட்டளைகள் மற்றும் ஏனைய கட்டளைகளை மாகாண சபைகளுக்கு ஏற்ற வகையில் நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

இதன் ஊடாக 13ஆவது திருத்தச்சட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன எதிர்பார்த்த பாதுகாப்புகள் அனைத்தும் நீங்கிச்செல்லும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்ன இந்த சட்டத்திருத்தத்தை கொண்டுவர முற்படுகின்றனர்.

வடக்கில் வாழும் தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்து மக்களையும் பாதிக்கும் ஒரு விடயமாக இது உள்ளது. எனவே, தேர்தல் காலத்தில் தேர்தல் குண்டுகளை போடவேண்டாம் என கோருகிறோம்-என்றார்.

விமல் வீரவன்ஸவின் இந்த குற்றச்சாட்டுக்கு ஆளுங் கட்சி சார்பில் பதிலளித்த அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த, “இந்தச் சட்டம் உடனடியாக கொண்டுவரப்படவில்லை. நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்பட்டு ஆறு மாதங்களின் பின்னரே இது கொண்டுவரப்படுகிறது.

அவ்வாறு கொண்டுவரப்பட்டாலும் சட்டம் திருத்தத்திற்கு உள்ளாக ஆறுமாதங்கள்வரை செல்லும் அதன் போது திருத்தங்கள் இருந்தால் மேற்கொள்ள முடியும். உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கும் உட்படுத்த முடியும்” - என்றார். (அ)

# மன்னார் மக்களின் காணிகள் அபகரிப்பு பதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் இல்லை!

## அருட்தந்தை எஸ்.மார்க்கஸ் குற்றச்சாட்டு

மன்னார், ஓக. 07

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கோணங்களில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்ற போதும், இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. எனவே மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் சகல விதமான பிரச்னைகளுக்கும் நாட்டின் ஜனாதிபதி உரிய தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மார்க்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகள் குறித்து விசேட ஊடக சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை (06) மதியம் மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக கனிய மணல் அகழ்வுத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான பாரிய முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

பல்வேறு கம்பனிகளால் பாரிய முயற்சிகள் இடம் பெற்றபோதும் இறுதியில் கம்பனி ஒன்று கனிய மணல் அகழ்வுக்காக மன்னார் மாவட்டத்தில் கால் பதித்துள்ளது.

குறித்த கம்பனி குறித்த இடத்தை கையகப்படுத்திக் கொள்ள அனுமதி வழங்க பல்வேறு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

மக்கள் சார்பாக நாங்கள், பொது அமைப்புக்கள் பல்வேறு எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றபோதும், குறித்த நடவடிக்கையை செயல்படுத்த பல்வேறு அரச நிறுவனங்களின் முயற்சியுடன் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 14 ஆம் திகதி கனிய மணல் அகழ்வு செய்யப்படவுள்ள இடங்களை நில அளவீடு செய்ய சுமார் 32 அரச திணைக்களங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதை மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து முழுமையாக எதிர்க்க உள்ளோம். மக்கள் ஒன்றிணைந்து முழுமையாக எதிர்ப்பை காட்ட உள்ளோம்.

னவே குறித்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையிட வேண்டும் - என்றார். (அ)

# தடை செய்த இரசாயனத் திரவத்தை காரில் கொண்டு சென்ற 2பேர் கைது!

கொழும்பு, ஓக. 07

இலங்கைக்கு இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்ட விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் இரசாயனத் திரவத்தை காரில் கொண்டு சென்ற இரு சந்தேக நபர்கள் திவுலப்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திவுலபிட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து தடை செய்யப்பட்ட விவசாய இரசாயனங்கள் அடங்கிய தலா 05 லீற்றர் கொண்ட 20 இராசயன போத்தல்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நுவரெலியா மற்றும் கொனவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.